# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



**மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,**
**செங்கல்பட்டு மாவட்டம்.**

கோப்பு எண்.1609/2022 செமா3 நாள் : .06.2022

**மனைப்பிரிவு ம.வ/ந.ஊ.து.இ.(செ.மா) எண்.77/2022**

---

## மனைப்பிரிவு நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.

4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR 2019–ல் குறிப்பிட்டுள்ள Residential Use–ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.

5. மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பிப் பாதை / தந்திக் கம்பிப் பாதை அமைந்தால், கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.

6. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

7. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.

8. மனுதாரர் மனைப்பிரிவுத் தொடர்புடைய சம்மந்தப்பட்ட உள்ளாட்சியிடமிருந்து இறுதி ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் நகர் ஊரமைப்புத் துறை மற்றும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

9. அ. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் திட்ட அனுமதி / இசைவு (Planning Permission / Concurrence) / மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ. மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும் போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

10. மனுதாரர், நகர் ஊரமைப்புத் துறையிடமிருந்து குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'x4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும், நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

11. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின் நிலஉரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

12. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு Planning Permission / Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட Planning Permission / Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் ரத்து செய்யப்படும்.

13. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கும் கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

195

14. மனைப்பிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடை செய்யாமல் புழக்க சாலைகளாக நிலைநிறுத்தப்பட வேண்டும்.

15. EWS மனைகள் பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஆகும். இம்மனைகளை ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது.

## அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விவரம்

| | | | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | | - | 7.2785 ஏக்கர் (அ)<br>29467.00 ச.மீ | – |
| ஒதுக்கிய மனைகள் | | - | 151 மனைகள் | |
| EWS மனைகள் | | - | 31 முதல் 39 வரை ;<br>41 முதல் 48 வரை மற்றும்<br>82 முதல் 101 வரை | |
| EWS மனைகள் பரப்பு | | - | 2389.92 ச. மீ | 12.12 % |
| உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பகுதி :– | | | | |
| பூங்கா – 1 | 1701.21 ச.மீ | - | 2173.21 ச.மீ | 10.1% |
| பூங்கா – 2 | 472.00 ச.மீ | | | |
| சாலைகள் பரப்பு | | - | 7732.08 ச.மீ | |
| பொது உபயோகம் | | - | 120.09 ச.மீ | 0.60 % |
| தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) பகிர்மான கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டது :– | | | | |
| தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கு ஒப்படைக்கப்பட்டது | | - | 120.04 ச.மீ | 0.60 % |

23/06/22.

இணை இயக்குநர் / துணை இயக்குநர் (பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

22/6/22 22/6/22

1979 (193)

கொளத்தூர் ஊராட்சி மன்றத்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை - திருமதி வே,ராஜேஸ்வரி

ந.க.எண்.05/2022/ஊ.த நாள்.07.07.2022

பொருள் - மனைப்பிரிவு - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் - கொளத்தூர் ஊராட்சி போரூர் கிராமத்தில் வானவில் மனைப்பிரிவில் **Thiru.P.Venkatasan Thiru. C.Baalakrishnan** என்பவரின் சர்வே எண்கள். **12/1B, 12/2B , 12/2C2, 12/3A2A, 12/3B, 12/4B, 13/1A5, 13/1A6, 13/1A7, 13/1A8, 13/1A9, 393/2, 393/3, 393/4, 393/5A, 393/5B, 393/6, 394/1, 394/2, 394/3A, 394/3B, 394/4, 394/5, 394/6, 394/7, 394/8, 395/1, 395/2A, 3952B, மற்றும்** 395.3-ல் 7.2785 ஏக்கர் பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு திருத்திய திட்ட அனுமதி அளித்து உத்தரவிடுதல் - சார்ந்து.

கொளத்தூர் ஊராட்சி செங்கல்பட்டு மாவட்டம்-600 127. தேதி:...................... திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்

பார்வை - 1.இணை இயக்குநர்/ உறுப்பினர் செயலர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு அவர்களின் ந.க.எண்.1609/2022/மாஉதிகு(செ.மா.5) நாள்.02.06.2022.
2. நகர் ஊரமைப்பு இயக்குநர்/ அலுவலகம், சென்னை அவர்களின் ந.க.எண்.19799/2022/மாஉதிகு(செ.மா.5) நாள்.08.06.2022.
3 கொளத்தூர் ஊராட்சி மன்றத்தலைவர் அவர்களின் ந.க.எண்.05/2021/ஊ.த நாள்.07.07.2022.
4 கொளத்தூர் ஊராட்சி மன்றத்தீர்மானம் எண் 14/2022-2023 நாள்,07.07.2022. பலவகை வரவு ரசீது எண் 9828 நாள். 07.07.2022.

*********

<u>உத்திரவு</u>

திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் கொளத்தூர் ஊராட்சி போரூர் கிராமத்தில் வானவில் மனைப்பிரிவில் Thiru.P.Venkatasan Thiru. C.Baalakrishnan என்பவரின் சர்வே எண்கள். **12/1B, 12/2B , 12/2C2, 12/3A2A, 12/3B, 12/4B, 13/1A5, 13/1A6, 13/1A7, 13/1A8, 13/1A9, 393/2, 393/3, 393/4, 393/5A, 393/5B, 393/6, 394/1, 394/2, 394/3A, 394/3B, 394/4, 394/5, 394/6, 394/7, 394/8, 395/1, 395/2A, 3952B, மற்றும் 395.3-ல் 7.2785** ஏக்கர் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, பார்வை 2-ல் காணும் .இணை இயக்குநர்/ உறுப்பினர் செயலர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு அவர்களின் **ந.க.எண்.1609/2022/மாஉதிகு(செ.மா.3)** நாள்.02.06.2022.நகர் ஊரமைப்பு இயக்குநர்/ அலுவலகம், சென்னை அவர்களின் **ந.க.எண்.19799/2022/மாஉதிகு(செ.மா.3)** நாள்.08.06.2022. என எண்ணிடப்பட்டு, தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, பார்வை 1-ல் காணும் கடிதத்தின்படி, திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

C. Baalakrishnan
P. Ven...

இதனைத் தொடர்ந்து, மனைப்பிரிவிற்கு இனைப்பில் உள்ள மனைபிரிவு நிபந்தனையளின் படி ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திக்கு **ம,வ/ ந,ஊ,து,இ,(செ,மா) எண்**.77/2022 என எண்ணிடப்பட்ட வரைபடங்களுக்கு ஆய்வு கட்டணம் ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) ஊராட்சியில் பலவகை வரவு ரசீது எண்.2828 நாள் -07/07/2022 ன்படி செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் பார்வை 4-ல் காணும் கொளத்தூர் ஊராட்சி மன்றத்தீர்மானத்தின் அடிப்படையிலும் மற்றும் கீழ்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனைப்பிரிவிற்கு திட்ட அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1) நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. எனவே நில உரிமை சான்றுகள் தவறென கண்டறியப்பட்டால் இவ்வுத்தரவு இரத்தானதாக கருதப்படும்.
2) மேற்படி மனைப்பிரிவில் தானபத்திரம் மூலம் பெறப்பட்ட பகுதிகளில் சாலைகள், குடிநீர், தெருவிளக்குகள் மற்றும் வடிகால் வசதிகள் மனுதாரரே சொந்த செலவில் அமைத்து தர வேண்டும்.
3) சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ண்பபதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ள வேண்டும்.
4) மனைப்பிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடை செய்யாமல் புழக்க சாலைகளாக நிலைநிறுத்தப்பட வேண்டும்.
5) இம்மனைப்பிரிவில் கட்டணங்கள் தொடர்பாக ஏதேனும் தணிக்கைத்தடை ஏற்படின், அதற்கான இழப்பீட்டுத் தொகையை மனுதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

தலைவர்
கொளத்தூர் ஊராட்சி
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்

பெறுநர்
Thiru.P.Venkatasan
Thiru.C.Baalakrishnan

203 (457)

கொளத்தூர் ஊராட்சி மன்றத்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை - திருமதி வே,ராஜேஸ்வரி

ந.க.எண்.05/2022/ஊ.த

நாள்.07.07.2022

பொருள் - மனைப்பிரிவு - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் - கொளத்தூர் ஊராட்சி போரூர் கிராமத்தில் வானவில் மனைப்பிரிவில் Thiru.P.Venkatasan Thiru. C.Baalakrishnan என்பவரின் சர்வே எண்கள். 12/1B, 12/2B , 12/2C2, 12/3A2A, 12/3B, 12/4B, 13/1A5, 13/1A6, 13/1A7, 13/1A8, 13/1A9, 393/2, 393/3, 393/4, 393/5A, 393/5B, 393/6, 394/1, 394/2, 394/3A, 394/3B, 394/4, 394/5, 394/6, 394/7, 394/8, 395/1, 395/2A, 3952B, மற்றும் 395.3-ல் 7.2785 ஏக்கர் பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு திருத்திய திட்ட அனுமதி அளித்து உத்தரவிடுதல் - சார்ந்து.

கொளத்தூர் ஊராட்சி செங்கல்பட்டு மாவட்டம்-600 127. தேதி:........ திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்

பார்வை - 1.இணை இயக்குநர்/ உறுப்பினர் செயலர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு அவர்களின் ந.க.எண்.1609/2022/மாஉதிகு(செ.மா.5) நாள்.02.06.2022.
2. நகர் ஊரமைப்பு இயக்குநர்/ அலுவலகம், சென்னை அவர்களின் ந.க.எண்.19799/2022/மாஉதிகு(செ.மா.5) நாள்.08.06.2022.
3 கொளத்தூர் ஊராட்சி மன்றத்தலைவர் அவர்களின் ந.க.எண்.05/2021/ஊ.த நாள்.07.07.2022.
4 கொளத்தூர் ஊராட்சி மன்றத்தீர்மானம் எண் 14/2022-2023 நாள்,07.07.2022. பலவகை வரவு ரசீது எண் 2888 நாள். 07.07.2022.

*********

## உத்திரவு

திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் கொளத்தூர் ஊராட்சி போரூர் கிராமத்தில் வானவில் மனைப்பிரிவில் Thiru.P.Venkatasan Thiru. C.Baalakrishnan என்பவரின் சர்வே எண்கள். **12/1B, 12/2B , 12/2C2, 12/3A2A, 12/3B, 12/4B, 13/1A5, 13/1A6, 13/1A7, 13/1A8, 13/1A9, 393/2, 393/3, 393/4, 393/5A, 393/5B, 393/6, 394/1, 394/2, 394/3A, 394/3B, 394/4, 394/5, 394/6, 394/7, 394/8, 395/1, 395/2A, 3952B,** மற்றும் 395.3-ல் 7.2785 ஏக்கர் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, பார்வை 2-ல் காணும் .இணை இயக்குநர்/ உறுப்பினர் செயலர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு அவர்களின் **ந.க.எண்.1609/2022/மாஉதிகு(செ.மா.3)** நாள்.02.06.2022.நகர் ஊரமைப்பு இயக்குநர்/ அலுவலகம், சென்னை அவர்களின் **ந.க.எண்.19799/2022/மாஉதிகு(செ.மா.3)** நாள்.08.06.2022. என எண்ணிடப்பட்டு, தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, பார்வை 1-ல் காணும் கடிதத்தின்படி, திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

C. Baalakrishnan
P. Venk

இதனைத் தொடர்ந்து, மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைபிரிவு நிபந்தனையளின் படி ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திக்கு **ம,வ// ந,ஊ,து,இ,(செ,மா) எண்.**77/2022 என எண்ணிடப்பட்ட வரைபடங்களுக்கு ஆய்வு கட்டணம் ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) ஊராட்சியில் பலவகை வரவு ரசீது எண் 2829. நாள் -07/07/2022 ன்படி செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் பார்வை 4-ல் காணும் கொளத்தூர் ஊராட்சி மன்றத்தீர்மானத்தின் அடிப்படையிலும் மற்றும் கீழ்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனைப்பிரிவிற்கு திட்ட அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1) நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. எனவே நில உரிமை சான்றுகள் தவறென கண்டறியப்பட்டால் இவ்வுத்தரவு இரத்தானதாக கருதப்படும்.
2) மேற்படி மனைப்பிரிவில் தானபத்திரம் மூலம் பெறப்பட்ட பகுதிகளில் சாலைகள், குடிநீர், தெருவிளக்குகள் மற்றம் வடிகால் வசதிகள் மனுதாரரே சொந்த செலவில் அமைத்து தர வேண்டும்.
3) சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணபதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ள வேண்டும்.
4) மனைப்பிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடை செய்யாமல் புழக்க சாலைகளாக நிலைநிறுத்தப்பட வேண்டும்.
5) இம்மனைப்பிரிவில் கட்டணங்கள் தொடர்பாக ஏதேனும் தணிக்கைத்தடை ஏற்படின், அதற்கான இழப்பீட்டுத் தொகையை மனுதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

தலைவர்
கொளத்தூர் ஊராட்சி
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்

பெறுநர்
Thiru.P.Venkatasan
Thiru.C.Baalakrishnan

207

# தீர்மான நகல்

திருப்போரூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கொளத்தூர் ஊராட்சியில் 07.07.2022 தேதியன்று வியாழக் கிழமை முற்பகல் / பிற்பகல் 10.00 மணிக்கு தலைவர் / ~~தனி அலுவலர்~~ திருமதி V. ராஜேஸ்வரி அவர்கள் தலைமையில் ஊராட்சி மன்ற அலுவலக இடத்தில் நடைபெற்ற சாதாரண / அவசர / சிறப்பு கூட்டத்தின் தீர்மான நகல்

தலைவர் உள்பட கூட்டத்தில் ஆஜரான அங்கத்தினர்கள் எண்ணிக்கை } அனைத்து உறுப்பினர்களும்.

| பொருள் | தீர்மானம் |
|---|---|
| செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் ஒன்றியம் கொளத்தூர் ஊராட்சியில் திரு P. வெங்கடேசன் திரு. C. பால கிருஷ்ணன் என்பவர் சர்வே எண்கள் 18/1B, 18/2B, 18/2C2, 18/3A2A 18/3B, 18/4B, 13/1A5, 13/1A6. 13/1A7 13/1A8, 13/1A9, 393/2 393/3 393/4 393/5A 393/5B 393/6 394/1 394/2 394/3A 394/3B 394/4 394/5 394/6 394/7 394/8 395/1 395/2A 395/2B 395-3-ல் 7.2785 ஏக்கர் பரப்பளவு மனையிடத்தில் அமையும் குடியிருப்பு மனை பிரிவுக்கு அனுமதி அளிப்பது தொடர்பாக சாலைகள், பூங்காக்கள் மற்றும் பொது உபயோக பகுதி ஒதுக்கீட்டினை ஊராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்ய மன்றம் மேலும் ஒப்புதல் வழங்க வேண்டி | கொளத்தூர் ஊராட்சி, செங்கல்பட்டு மாவட்டம்-600 127. தேதி:........ திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் (முத்திரை)<br>மன்றம் மேலும் ஒருமனதாக ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது. |

உண்மை நகல்

ஒப்பம்
V ராஜேஸ்வரி
**தலைவர்**
கொளத்தூர் ஊராட்சி

C. [illegible]
P. [illegible]



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate